விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (26.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 158

## புறாப்பொறுக்கியில் கிளைமோர் மீட்பு

(துன்னாலை)

வல்லை புறாப்பொறுக்கிப் பகுதியில் நேற்றுக் காலை கிளைமோர்க் குண்டு இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 10 கிலோ கிராம் நிறையுடைய இக் கிளைமோர் இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து வீதியோரமாக வைக்கப்பட்டிருந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து (08 ஆம் பக்கம் பார்க்க)

## குளப்பிட்டி வீதியில் கிளைமோர் சிப்பாய்; பொதுமகன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதியில் நேற்று மாலை 6 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை பணி முடித்துக்கொண்டு முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த இராணுவத்தை இலக்கு வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். இதன் போது பலசரக்கு வியாபார நிலையம் ஒன்று முற்றாக சேதமடைந்தது.

அங்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சென்றிருந்த யாழ்.போதனாவைத்தியசாலையில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் கிளைமோர் இராணுவச் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.


வவுனியா-மன்னார் வீதியில் இராணுவத்தினரின் உழவு இயந்திரத்தை இலக்கு வைத்து நேற்றுக் காலை 10 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இராணுவச் சிப்பாய் கொல்லப்பட மற்றொரு சிப்பாய் காயமடைந் துள்ளார். (ச-05)

# ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தால்

# புலிகள் நேரடிப் பேச்சிற்கு வருவார்கள்

## ஜனாதிபதி மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)



விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் விதித்தால் புலிகளுக்குள்ள சந்தர்ப்பங்கள் மிகக்குறையும். இந்நிலையில் அவர்கள் பேச்சுக்கு வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் த பினான்சியல் ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் வீட்டில் இருந்து தொலைபேசி மூலம் வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் திங்கட்கிழமை தடைவிதிக்கும் என அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## 63 இலங்கை அகதிகள் நேற்று தமிழகம் சென்றனர்

(இராமேஸ்வரம்)

இலங்கையில் போர் அபாயம் அதிகரித்து வருவதன் தொடர்ச்சியாக மேலும் 63 அகதிகள் நேற்று அதிகாலை தமிழகம் சென்றனர்.

தனுஷ்கோடிக்கு 36 அகதிகளும் தங்கச்சிமடத்திற்கு 22 அகதிகளும் மண்டபத்திற்கு 5 அகதிகளும் வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசாரணைக்குப் பின்னர் அனைவரும் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை ஆயிரத்து 842 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளதாக தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாக இராமேஸ்வரம் செய்திகள் தெரிவித்தன. (ச-05)

## கிளைமோர்த் தாக்குதலில் நான்கு பொலிஸார் பலி

### காத்தான்குடியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி கடற்கரை வீதியில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றில் இரகசியமாக பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோரே நேற்றுக் காலை 7 மணியளவில் வெடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து பதில்தாக்குதலாக இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அப் பகுதியைச் சுற்றிவளைத்து இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தியதாகவும் அப் பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## மன்னார் கிளைமோர்த்தாக்குதலில் போராளி பலி; இளைஞன் காயம்

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான மன்னார் மடுப்பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் படையிணியினர் நடத்திய கிளைமோர்த்தாக்குதலில் போராளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மடு உயிலங்குளம் பகுதியில் இருந்து மடுத்தேவாலயம் நோக்கிய திசையில் பயணித்த உழவு இயந்திரத்தை இலக்கு வைத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதுடன் மன்னார் முட்கொம்பனைச் சேர்ந்த செல்லத்துரை விஜயபாலன் (வயது 22) என்ற இளைஞர் காயமடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## கடற் கண்காணிப்புக்குறித்து ஹென்றிக்சன் -எரிக் பேச்சு

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனும், எரிக்சொல்ஹெய்மும் நோர்வேயில் சந்தித்து கண்காணிப்பு விடயங்கள் குறித்து பேசியதுடன் இருவரும் இலங்கை வருகின்றனர்.

நோர்வேயில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்குவது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் நாடுகளுடன் பேச்சுக்கள் நடைபெற்றன.

அக்கூட்டத்தில் நடைபெற்ற விடயங்கள் 'உள்ளக' விடயங்கள் தான் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ் டொட்றிக் தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து உரிய தரப்பினருடன் பேசவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதேவேளை (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலாளர்களுடன் பௌயர் நேற்று பேச்சு



(கொழும்பு)

சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் சந்தித்து தற்போதைய நிலை குறித்து தெளிவுபட உள்ளதாக இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடினார். (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிரந்தர சமாதானத்தினை ஏற்படுத்தினாலே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்

## அமைச்சர் சரத் அமுனுகம சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உலக பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்கின்றது. எமது பொருளாதாரம் குறைந்து செல்கிறது. சர்வதேச முதலீட்டாளர்கள் இங்கு வரக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என அமைச்சர் சரத் அமுனுகம சபையில் தெரிவித்தார்.

செஸ் வரி தொடர்பான சட்ட மூலத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த வருட மத்திய வங்கி அறிக்கையின்படி எமது பொருளாதாரம் 17.2சதவீதமாக இருந்தது. ஆனால் தற்போது கைத்தொழில் துறை மூலம் 22சதவீதமும் சேவைகள் துறைகள் ஊடாக 55 சதவீதமும் உயர்வடைந்துள்ளது.

நாங்கள் இன்னமும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய முடியும். ஆனால் எங்களில் சிலர் இன்னமும் விவசாயத்தைப் பற்றியே பேசுகின்றனர். நீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவது குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நீரிலிருந்து மின்சாரத்தை பெறுவதற்குரிய யோசனைகள் நாங்கள் முன்வைப்பதில்லை.

இந்தியா ,சீனா போன்ற நாடுகளில் நீரைப் பயன்படுத்தி மின்சாரத்தை பெறுகின்றனர். அனல் மின்நிலையங்களை உருவாக்கியுள்ளனர். எமது நாட்டில் பல நீர் நிலைகள் உள்ளன. ஆயிரம் ஆயிரம் நீர் மின்நிலையங்களை உருவாக்கமுடியும். ஆனால் அதனைப் பற்றி யாரும்சிந்திப்பதில்லை.

வேலையில்லாப் பிரச்சினை என்று கூறுகின்றார்கள். ஆனால் வேலைக்கு தகுதியில்லாத, வலு இல்லாதவர்களை வைத்துக் கொண்டு எப்படிவேலை வழங்க முடியும்.

எனவேதான் கல்வி முறையில் மாற்றம்செய்ய வேண்டும். வேலையின் தேவைக்கு ஏற்ப கல்வி முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

நாங்கள் இன்னமும் மரபு வழி சிந்தனைகளிலும் பாரம்பரியங்களிலும் தங்கியுள்ளோம். நவீன முறைகள் பற்றி சிந்திக்க வேண்டும். முதலீட்டாளர்கள் இங்கு வரத் தயங்குகின்றனர். உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவதில்லை. நிலையான சமாதானம் முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிறார். (க)

# சொல்ஹெய்ம், பௌயர் இன்று ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்பு

ஸ்தம்பித்திருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்துப் பேச்சு நடத்துவதற்காக கொழும்பு வந்தடைந்த இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் பௌயர் இன்று கொழும்பு வந்துசேரும், நோர்வே அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் சகிதம் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நாளை சனிக்கிழமை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ள பௌயர் அதற்கு முன்னர் கொழும்பில் அரசியற் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார் எனக் கூறப்படுகின்றது. தமது கிளிநொச்சிப் பயணத்தின் பின்னர் பௌயர் மீண்டும் கொழும்பில் ஜனாதிபதியைச் சந்திப்பா ரெனக் கூறப்பட்டது. ஆனால்த இதனை உறுதியாகக் கூற முடியாதெனக் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார். (க)

## களுத்துறையில் 103 தமிழர்கள் கைது

களுத்துறை மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் பிரிவுகளில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிககைளின் போது 103 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள்இல்லாதவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விடுவிக்கப்படவுள் ளனர். கைது செய்யப்பட்ருப்போரில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் சிலரும் அடங்குவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# மனிதாபிமானமற்ற படகோட்டிகளுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுங்கள் !

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி மன்னார் மீனவ கூ.ச.சமாசத்துக்கு கடிதம்

(மன்னார்)

இந்தியாவிற்கு செல்ல முற்படும் அப்பாவி மக்களை ஏமாற்றி பணம்பறிக்கும் மனிதாபிமானமற்ற படகோட்டிகள் மற்றும் சில மீனவர்களுக்கு எதிராக உடன்நடவடிக்கை எடுக்குமாறு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு அவர் எழுதிய கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அரச படையினர் விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் எனக் கூறியவாறு விமானக் குண்டுவீச்சுக்களை பொதுமக்களின் இருப்பிடங்களில் மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக உயிர் பிழைத்தாலே போதுமென இந்தியாவை நோக்கிப் பயணிப்பதற்காக மன்னாருக்கு மக்கள் வருகின்றார்கள்.

ஒரு சில படகோட்டிகள் இம் மக்களை ஏமாற்றுவது மிகக் கவலைக்குரிய மனிதாபிமான மற்ற விடயமாகும்.

அவதியுற்று அல்லல்படுவோருக்கு ஆறுதல்அளிப்பதை விடுத்து பணம் சேகரிப்பதையே நோக்காகக் கொண்டு அளவுக்கதிகமான பயணிகளை படகில் ஏற்றி அவர்களை நடுக்கடலில் காவு கொடுப்பதும் கடல்நடுவே உள்ள மணற் திட்டுக்களில்இரவு நேரங்களில் மக்களை இறக்கிவிடுவதும் நடைபெறுகின்றன.

இதற்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டிக் கொள்கின்றேன் என செல்வம் அடைக்கலநாதன் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

# வலுவிழந்தோருக்கான சுயதொழில் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம், விசேட தேவையுடை யோருக்கான (வலுவிழந்தோருக்கான)சுயதொழில் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள் ளது.

இப்பயிற்சி நெறியினை வழங்குவதற்கு ஏற்ற இடமாக ஆரியகுளம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளது. ஓவியம், சிற்பம்ஆகிய துறைகளுக்கு 25பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஆறுமாத காலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்தங்களது பிரதேச செயலகங்களில் விண்ணப்பப் படிவங்களை ஒப்ப டைக்குமாறும் மேலதிக விபரங்களை சமூக சேவகர் களிடம் கேட்டறியுமாறும் மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்துள்ளார். (க-133)

# இராசி பலன்

**26.05.2006**
**(வைகாசி 12, வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தசி பிற்பகல் 12.34 மணிவரை**
**பரணி முற்பகல் 8.33மணிவரை**
**இராகுகாலம் 10.22-11.52 மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**
**கார்த்திகை விரதம், அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | மனச் சஞ்சலம், காரியதாமதம், உறவினர் வெறுப்பு, வேலைச்சுமை. |
| இடபம் | ஆழ்ந்த சிந்தை, முயற்சி கைகூடும், தெய்வநம்பிக்கை, போசனசுகம். |
| மிதுனம் | காரியஅலைச்சல், மனஸ்தாபம், பிரயாணம், சயனசுகக்குறைவு. |
| கடகம் | தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், கலந்துரையாடல், பொருள்சேர்க்கை. |
| சிங்கம் | புதிய திருப்பம், நண்பர்கள் உதவி, காரிய நன்மை, நல்லசெய்தி. |
| கன்னி | தொழில்சிந்தை, தந்தைவழி உறவு, பிரயாணம், புதிய முயற்சி. |
| துலாம் | எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், மரியாதைக்குறைவு, வாகனபயம். |
| விருச்சிகம் | எடுத்தகரியம் கைகூடும், தெய்வதரிசனம், நண்பர்கள் சந்திப்பு, பணவருவாய். |
| தனுசு | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், தொழில் வருத்தி உடல்நலம். |
| மகரம் | வியாபார விருத்தி , புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், ரோகநிலை. |
| கும்பம் | நல்லதகவல் , நல்லமுயற்சி, பூர்வ புண்ணிய கருமம், கல்வியில் ஆர்வம். |
| மீனம் | இனிய நிகழ்வு, காரிய நன்மை, தெய்வ தரிசனம், பொருள்சேர்க்கை. |

- வளவன்

# புலிகளுக்கு இரகசியத் தகவல் அனுப்பியதா? யார் நம்புவார்கள் என்கிறார் சோமவன்ச



(கொழும்பு)

புலிகள் இயக்கத்திற்கு ஜே.வி.பியினர் இரகசிய தகவலை அனுப்பியுள்ளார்கள் என்று கூறினால் யார் நம்புவார்கள்? என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமர சிங்க கேள்வியெழுப்பினார்.

ஊடகங்கள் ஏன்தான் பக்கச் சார்பாக நடந்து கொள் கின் றனவோ என்று புரியாமல் உள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜே.வி.பி சார்பாக தெரிவாகியுள்ள 382 உறுப்பினர்களுக்கான செயலமார்வு கடந்த புதன்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் இறைமையைப் பாதுகாத்து சட்டங்களை நடைமுறைப் படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

இருப்பினும் நாட்டின் அனைத்துத் தரப்பினரும் பொறுப்புள்ளவர்கள். ஆளும் கட்சி மட்டுமின்றி எதிர்க் கட்சியினரும் நாட்டு மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள். (க)

# தரமற்ற ஐஸ்கிறீம் தயாரிப்பு; ஒருவருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

தரமற்ற ஐஸ்கிறீமை தயாரித்த குற்றச்சாட்டின் பெயரில் பிராந்திய உணவுப் பரிசோதகர்களால் கைது செய்யப்பட்ட இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குட்டப்பன் கிருஷ்ணன், லோகேந்திரன் லோகேந்திரராணி ஆகிய இருவருமே நீதிபதி முன் ஆஜர்படுத்தப் பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் 25 ஆயிரம் ரூபா திலர் பிணையாணையில் விடிவிக்கப்பட்டதுடன் ஐஸ்கிறீம் தொழிற்சாலையும் சீல்வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இவர்களது வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளியாக காணப்பட்ட லோகேந்திரன் லோகேந்திரராணிக்கு 5000ரூபா தண்டப்பணமும் 5000 ரூபா தர்மப்பணமும் செலுத்தும்படியும் மற்ற நபரை விடுதலைசெய்யும்படியும் உத்தரவிட்ட நீதிபதி ஐஸ்கிறீம் தொழிற்சாலையை திறப்பதற்கும் அனுமதி வழங்கினார். (து-132,133)


# அழைப்புக் கட்டளை

*இல.16 பிரிவு 55 (1)*

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மகேந்திரம் பெண் சிவதர்சினி
மறுநாமம்
சுந்தரேஸ் மகள் சிவதர்சினி
23,சங்கிலியன் வீதி,
நல்லூர்.

வழக்கு இல:672/மணநீக்கம் வழக்காளி

எதிர்

மயில்வாகனம் மகேந்திரம்
கர்த்தர் கோவிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

எதிராளி.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி, தமக்கும் உமக்குமிடையேயான திருமணத்தை ரத்துச் செய்வதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2006 ஆம் ஆண்டு வைகாசி 31ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற்கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

வரைந்தவர்
சபா ரவீந்திரன்
வழக்காளியின் சட்டத்தரணி.

து.சிறீமோகன்
பதிவாளர்.
மாவட்டநீதிமன்றம், யாழ்ப்பாணம்.
23.05.2006

(C/329

# பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

சொந்தமாக மோட்டார் சையிக்கிள் வைத்திருப்பவராகவும், சாரதி அனுமதிப்பத்திரம், பெற்றிருப்பதுடன் யாழ். நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஆர்வமுடையோர் 31.5.2006ஆம் திகதிக்கு முன்னராக கீழ் காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம்

*நிர்வாக உத்தியோகத்தர்,*
*வலம்புரி அன்கோ*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு உயிரிழப்புகள் ஏற்படலாமென அச்சம்

(காரைநகர்)

காரைநகரில் சட்டவிரோத மின்பாவனைகள் அதிகரித்திருப்பதனால் அநாவசியமான உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

காரைநகரில் கருங்காலி, பலகாடு, வாரிவளவு, தங்கோடை, கள்ளித்தெரு, ஆலடி, சிவகாமியம்மன் கோவிலடி, வேதரடைப்பு, மல்லிகை, நடுத்தெரு, களபூமி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெறப்பட்டு வருகின்றது.

இத்தகைய சட்டவிரோத மின்சாரப் பாவனை முறையால் உயிராபத்துக்கள் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

பாதுகாப்பற்ற வயர் கம்பிகள், முட் கம்பிகள் போன்றவற்றினைப் பயன்படுத்தி ஒன்று ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் வரை சட்டவிரோத மின்னைப் பெற்று பல வீடுகளிற்கு பகிர்ந்துகொடுத்து உயர் மின்வலு பெறப்படுகிறது.

இதனால் ஏனைய சட்டபூர்வ மின் பாவனையாளர்களிற்கு மிகவும் வலுக்குறைந்த மின்சாரமே கிடைக்கின்றது.

இச்சட்டவிரோத மின்பாவனை தொடர்பாக பலமுறை மின்சார சபைக்கு தெரியப்படுத்தியும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காதது பற்றி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-246)

# அரச கட்டுப்பாடற்ற பிரதேசத்தை வேவு பார்க்கும் உளவு விமானம்!

அம்பாறையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு மேலாக இலங்கை விமானப்படையின் உளவு விமானம் பறந்து வேவு பார்த்துச் சென்றுள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப்புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அம்பாறை காஞ்சிரங்குடா பகுதி மற்றும் அக்கரைப்பற்று வட்டமடு முதல் ஒபாத்துவில் வரையான காட்டுப் பிரதேசங்கள் ஆகியவற்றின் மேலாக சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக வட்டமிட்டு வேவுபார்த்த இந்த உளவு விமானம் காலிப் பகுதியை நோக்கி திரும்பிச் சென்றதாக நேரில் பார்த்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை உளவு விமானம் இவ்வாறு பறந்து சென்றுள்ளதாக அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ள விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா, அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான உளவு விமானம் பறந்தது இதுதான் முதல்தடவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அமைதி முயற்சிகளுக்கு ஊறு விளைவித்து வருகின்றார்கள் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## சுன்னாகம்

# கதிரமலைச் சிவன் மஹோற்சவம்



13ஆம் நாள்

இன்று தீர்த்த வாரிதிக் காட்சி



## அழகு முகம் நோக்கி

பக்திநிறை பக்தர்வலம் வந்துருகி ஏற்றி
பண்ணுமொழிப் பாவிலுயர் வேதசரம் சாற்றி
சித்தமொடு சொல்செயலில் சிவநினைவு தேக்கி
சிந்தைமகிழ்ந் திறைகாட்சி கண்டு விழி மூடி
அத்தனவன் னன்புநிறை யழகுமுகம் நோக்கி
அருளொழுகு பரவசமே யுருகநிதம் போற்றி
பித்தனருள் வித்தகுரு முத்தனடி பற்ற
வினையகலும் அம்பிகை இணைந்த பெருமானே!

-இயல்வாணன்

# சகல பாடசாலைகளிலும் அனர்த்த முகாமைத்துவ கல்வி

## போதிப்பது குறித்து கல்வி அமைச்சு ஆலோசனை

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் அனர்த்த முகாமைத்துவக் கல்வியை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கல்வியமைச்சு ஆலோசனை நடாத்தி வருகின்றது.

2004ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தையடுத்து மக்களுக்குரிய விழிப்பூட்டலில் அவசியம் குறித்து கல்வி சார்ந்த, சாராத நிறுவனங்கள் தமது கருத்துக்களை அமைச்சுக்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தன. அதனடிப்படையில் பாடசாலை மாணவர் களுக்கு முகாமைத்துவ கல்வியின் தேவை பற்றியும் தொடர்ந்து ஆலோசிக்கப்பட்டு வந்தது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் கலந்துரையாடல்களும் இலங்கையெங்கிலும் இன்னமும் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு இதுபற்றிய கல்வி வழங்கும் திட்டத்தினடிப்படையில் முதலில் ஆசியர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக போதிக்கப்படும். அத்துடன் அனர்த்தத்தின் பின்னரான செயற்பாடுகளுக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஆபத்துப் பகுப்பாய்வு, அனர்த்தத்திற்கான ஆயத்த நிலை, தற்பாதுகாப்பு ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படும்.

இத்திட்டத்திற்கான ஆதரவையும ஒத்துழைப்பையும் ஜேர்மன் நிறுவனம் ஒன்று வழங்கி வருகிறது. (க-9)

# 2006 க்கான வாக்காளர் இடாப்புகளை தயாரிக்கும் பணி ஜூன் - 1இல் ஆரம்பம்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளைத் தயாரிக்கும் பணிகள் எதிர் வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தத்தமது பகுதி கிராம சேவகரிடமிருந்து இதற்கான படிவங்களை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதைப் பூர்த்திசெய்த சகலரும் இந்தப் படிவங்களில் தமது விபரங்களைப் பதிவுசெய்து வாக்காளராவதற்கான தகுதியைப் பெறலாம்.

வாக்காளர் படிவங்களை உரிய முறையில் நிரப்பிக்கொடுக்காததால் கடந்த தேர்தல்களில் பெரும்பாலானோர் வாக்களிக்கும் வாய்ப்பினை இழந்ததாக தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாக தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

உரியநேரத்தில் இந்தப் படிவங்களை நிரப்பி கிராம சேவகர்களிடம் கையளிப்பதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை 2005ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் செல்லுபடியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ள வாக்காளர் படிவங் கள் கிடைக்கப்பெறாதவிடத்து கிராம சேவகர்களிடம் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-9)

# பொதுப் பரீட்சைகள்

(கொழும்பு)

எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் 4 பிரதான பொதுப் பரீட்சைகளை நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் யாவும் கொழும்பில் மாத்திரம் நடத்தப்படவுள்ளதாகவும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இலங்கை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கிக்கு முகாமைத்துவ பயிலுனர்களை தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை, வரி மதிப்பீட்டாளர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு திறமை அடிப்படையில் 2ஆம் வகுப்பின் 2ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை என்பன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. (க-9)

# மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடா? பெற்றோலிய வள அமைச்சர் அதிர்ச்சி!

நாட்டில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து தான் அதிர்ச்சி அடைந்துள்ளதாகவும் அந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லையென்றும் பெற்றோலிய வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் ஒயில் நிறுவனத்தினால் நிறுவகிக்கப்படும் விநியோக மையங்களில் தேவையான மண்ணெண்ணெய் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாவனையாளர்களுக்கு வேண்டியளவு மண்ணெண்ணெய் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விநியோகநிலையங்களில் உள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாதிக மெதகம கூறினார்.

பாவனையாளர்கள் தமக்குத் தேவையான மண்ணெண்ணெய்யை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விநியோக முகவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-5)

## நோர்வே செல்கிறார் ஹென்றிக்சன்

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்த கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹென்றிக்சன் விரைவில் நோர்வேக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். கொழும்பில் ஸ்கண்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளை இதுதொடர்பாக ஹென்றிக்சன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தற்போதைய 45 பேர் கொண்ட குழுவினருடன் மேலும் 15 பேரை இணைத்துக் கொள்வது தொடர்பாக நோர்வே அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்த ஹென்றிக்சன் ஒஸ்லோ செல்லவுள்ளதாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஓல்ப்ஸ்டொட்டிர் தெரிவித்தார். (க)

# பாதிப்புற்ற சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் முறையிடலாம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஏற்கனவே நடத்தப்பட்டு அதன்மூலம் பலர் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி நேர்முகப் பரீட்சையானது ஒழுங்கான முறையில் நடத்தப்படவில்லையென அம்மாகாணத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பலர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு முறையிட்டு வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகள் தினந்தோறும் கிடைத்துவருகின்ற நிலையில்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு- கிழக்கு ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன் பிரகாரம் மேற்படி நேர்முகப் பரீட்சை தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் முன்வைக்கக்கூடிய முறைப்பாடுகளை எழுத்து மூலமாக தனக்கு அனுப்பிவைக்குமாறு ஆளுநர் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை குறித்து கருத்துக்களை தெரிவிக்க விரும்புகின்ற பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, இலக்கம் 61, இசிப்பத்தன மாவத்தை, கொழும்பு - 05 என்ற விலாசத்திற்கு தங்களது முறைப்பாடுகளை அனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றனர் என்று அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி, நீர்வேலிப் பகுதிகளில் நேற்று படையினர் தீவிர தேடுதல்களில் ஈடுபட்டனர்.

அப்பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளில் சென்ற பொதுமக்களையும் படையினர் சோதனையிட்டனர். (க-15)

# இன்று ஒரு தகவல்

## மரணத்தின் மறுபக்கம்

மனித வாழ்வு மரணத்துடன் முடிந்து போகும் ஒன்று என்று தான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். 'மரணம்' என்பது என்ன? மூச்சும் இதயத்துடிப்பும் நின்று போவது தான் மரணம். இவையிரண்டும் நின்று போய்விட்டால் என்ன நடக்கும் தெரியுமா? உயிர் வெளியே போகிறது. இந்த நேரத்து அனுபவம் எப்படி இருக்கும்? என்பது போன்ற சில ஆராய்ச்சிகள் ஏற்கனவே நடந்திருக்கின்றன. இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

சாகின்ற அனுபவத்தைப் பற்றி எப்படி ஆராய்ச்சி செய்வது என்று யோசிக்கிறீர்களா? இந்த உலகத்தில் தினமும் எத்தனையோ விபத்துக்கள் நடக்கின்றன. அதில் மரணத்தின் விளிம்பு வரை சென்று திரும்பவும் உயிர் தப்புபவர்களும் உண்டு. செத்துப் பிழைப்பவர்களும் உண்டு. இவர்களையெல்லாம் சோதனை செய்துதான் இந்த ஆராய்ச்சியை செய்கின்றனர். அப்படி செத்துப்பிழைத்த சிலரின் அனுபவம் எப்படி இருந்தது தெரியுமா? அவர்கள் என்ன சொல்கின்றனர் என்றால் ஒரு இருண்டபாதை...அந்த இருட்டு வெளியில் சொல்லமுடியாத வேகத்தில் தள்ளப்பட்டது போலிருந்ததாம்...! அதற்குப் பிறகு அவர்கள் உடலைவிட்டு தனியே இருப்பது போல் உணர்ந்தார்களாம் அவர்களது உடலை அவர்களே. ஒரு அந்நிய மனிதன் மாதிரிப் பார்க்க முடிந்தது என்று சொல்கின்றனர்.

ஒரு பெரிய கார் விபத்தில் செத்துப் பிழைத்த ஒருவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "நாங்கள் காரில் போய்க் கொண்டிருந்தோம்.... குறுக்கே வந்த ஒரு கார் எங்களின் கார் மீது திடீரென்று மோதிவிட்டது. அவ்வளவுதான்... நான் எங்கேயோ இருட்டில் வேகமாகப் போவது போல் இருந்தது. பிறகு திடீரென்று ஒரு ஐந்துஅடி உயரத்தில் நான் காற்றில் மிதப்பது போல் உணர்ந்தேன். என் காரை என்னால் பார்க்க முடிந்தது. காரைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. எனது காரில் வந்த சிநேகிதன் அதிர்ச்சியுடன் காரின் இடிபாடுகளிலிருந்து வெளியே வந்தான். எனது உடல் உள்ளே சிக்கிக்கொண்டது. இவை எல்லாவற்றையும் என்னால் தெளிவாகப்பார்க்க முடிந்தது" என்கிறார்.

இன்னொரு பெண்ணுக்குத் திடீரென்று ஒருநாள் மாரடைப்பு வந்து இறந்துவிட்டார். அதன்பின் அதிஷ்டவசமாகப் பிழைத்துக்கொண்டார் அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "எனது மூச்சும் இருதயமும் நின்றுவிட்டது. நர்ஷ் டாக்டர்களை அவசரமாகக் கூப்பிடுவது கேட்டது நான் எனது உடலைவிட்டு வெளியே வந்து காற்றில் வெறும் காகிதத்தைப் போல் மிதக்கிறேன். டாக்டர்களும் தாதியரும் எனக்கு சுவாசம் வரவழைக்க முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். பெரிய இயந்திரம் ஒன்றைக் கொண்டு வந்து எனது உடலுக்கு மின் அதிர்ச்சி கொடுக்கிறார்கள். அதனால் என் உடல் அதிர்வைக் கூட தெளிவாகப் பார்த்தேன்" என்கிறார்.

உடலைவிட்டு வெளியே வருபவர்களின் அனுபவம் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாகத்தான் உள்ளது. அவர்கள கூறும் வர்ணனை பலவிதமாக இருந்தாலும் ஒருவிஷயத்தை மட்டும் எல்லோரும் உறுதியாகச் சொல்கின்றனர் என்ன தெரியுமா?

அதாவது உடலைவிட்டு வெளியே வந்த பிறகு வலி இல்லை.வேதனை இல்லை என்கிறார்கள். சுகமான வெதுவெதுப்பான நீரில் மிதப்பது போலிருந்தது என்கிறார்கள். இன்று விஞ்ஞானிகள் சொல்லும் விடயத்தை இளங்கோவடிகள் அன்றே சொல்லியிருக்கிறார். கோவலனை விசாரணை ஏதுமில்லாமல் கொன்று விடுகிறார்கள். கண்ணகிக்கு இத் தகவல் கிடைக்கிறது. கதறிக் கொண்டே ஓடிப்போய் பார்க்கும் போது கோவலனின் உடல் இரண்டு துண்டாகக் கிடக்கிறது.


அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது என்ன தெரியுமா? செத்துப்போன கோவலன் எழுந்து நின்றான். கணணகியைப் பார்க்கிறான் 'முழுநிலவு மாதிரி இருந்த உன்முகம் வாடிவிட்டதே' என்று கவலைப்படுகிறான். அவளது கண்ணீரைத் துடைக்கிறான். அதன்பின் அவன் வெட்டப்பட்ட ஸ்தூல உடலைவிட்டு முழுமையான பழுதில்லாத ஆவி உடலாக மாறித் தேவர்கள் சூழ வானுலகம் போய்விடுகிறான். பழுது ஒழிந்து எழுந்தான் என்று இளங்கோவடிகள் சொல்கிறார்.

பொதுவாக செத்துப்பிழைக்கின்ற எல்லோரும் ஒரு அதிசய விடயம் பற்றிக் கூறி நிற்கின்றனர். அதாவது ஜோதி ரூபமாக அவர்கள் ஒரு பொருளைக் கண்டதாகச் சொல்கின்றனர். மிகவும் பிரகாசமாக இருக்கிறதாம் இருந்தாலும் கண்கூடவில்லையாம். அந்த வெளிச்சத்தைப்பற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லையாம். இதைத்தான் இராமலிங்க அடிகள் அருட்பெருஞ்சோதி என்றார்.

இன்னொரு விடயம்... அந்த வெளிச்சம் அவர்களுடன பேசியதாக வேறு சொல்கின்றனர். வெளிச்சம் எப்படிப் பேசும என்கிறீர்களா? வார்த்தையோ... குரலோ கேட்கவில்லையாம்.ஆனாலும் அது சொல்வது புரிகிறதாம். இது வரைக்கும் நான் சொன்னதெல்லாம் நானாக சொன்னதில்லை. விஞ்ஞானிகளும் மெஞ்ஞானிகளும் சொன்னது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழர்கள் மீதான வன்முறை தொடர்ந்தால் தனிநாடு நோக்கி அவர்கள் தள்ளப்படுவார்கள்



## என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

**வடக்கு கிழக்குத் தமிழர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வழங்காத போதிலும் அந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கிறது. அப்பாவித் தமிழர்கள் மீது வன்முறைகள் தொடர்ந்து தொடுக்கப்படுமானால் தமிழர்கள் தனி நாடொன்றை நோக்கியே தள்ளப்படுவர்.**

**இவ்வாறு தெரிவிக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.**

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும் பிரதான பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்க வேண்டுமென வலியுறுத்திக் கூறிய ரணில் விக்கிரமசிங்க அரசும், புலிகளும் அதனைப் பேணி நடக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தமிழர்கள் மீது தொடர்ந்து அடக்குமுறைகள் இடம் பெறுவதானது சர்வதேச ரீதியில் இலங்கைக்கு ஒரு அவப் பெயரை உண்டாக்குமென்றும் சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, இது தமிழர்களை தனிநாடொன்றுக்கே இட்டுச்செல்லுமென்றும் கூறினார். (கு)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கின் மீது விசாரணை ஆரம்பம்

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் இறைமைக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதால் அதனை உடனடியாக ரத்துச் செய்யவேண்டுமென நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக நான்கு வருடங்களுக்கு முன்னர் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தாக்கல் செய்திருந்த மனுக்கள் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனோகர டி.சில்வா மேற்கண்டவாறு வலியுறுத்தியிருக்கின்றார்.

நாட்டின் இறைமையைத் தீர்மானிக்கும் முழு உரிமை ஜனாதிபதிக்கே இருப்பதாக மன்றில் குறிப்பிட்ட சட்டத்தரணி, அப்போதைய பிரதமர் இந்த விடயங் களை அறியாமல் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் இன்று நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள் கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார். சட்டத்தரணியின் வாதங்களைக் கேட்ட நீதியரசர் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தார். (கு)

## "ரேக்கி" கிண்ணத்துக்கான கிரிக்கெற் போட்டித் தொடரின் இறுதியாட்டம்

(சுண்டிக்குளி)

இலங்கை கிரிக்கெற்றின் மூன்றாம் பிரிவிற்கான சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெறும் அணியை தெரிவு செய்தற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெற் சங்கம் அதில் பதிவு செய்துள்ள 13 விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்திவந்த 50ஓவர்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட லீக் முறையிலான (ரேக்கி) கிண்ணத்திற்கான கிரிக்கெற் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி இதனை எதிர்த்து ஆடிய மானிப்பாய் பரீஷ் விளையாட்டுக் கழக அணியை 86 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 50ஓவர்களில் 9விக்கெற்றுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

ஏ.ஜெயந்தன் ஆட்டமிழக்காமல் 47ஓட்டங்களையும் ரீ.சரவணன் 32 ஓட்டங்களையும் ராஜி 19ஓட்டங்களையும் கோபிநாத் 18 ஓட்டங்களையும் தமது அணிக்கு பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜெயரூபன், கிஷோக்குமார் தலா 2விக்கெற்றுக்களையும், கார்த்தீசன் , சுபாஷ், பாஸ்கரன் ஆகியோர் தலா 1 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஷ் அணி 28ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 116ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியுற்றது.

ஜெயதீபன் 28ஓட்டங்களையும், நவீனன் 14ஓட்டங்களையும் தமது அணிக்கு பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மணிவண்ணன் 4, சரவானந்தன் 3, பந்துலன் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஏ.ஜெயந்தன் தெரிவுசெய்யப்பட்டார். (கு-110)

## கொழும்பு மாநகர முதல்வராக இராமநாதன் கணேஷன் தெரிவு

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபை தேர்தலில் மூக்குக்கண்ணாடி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சுயேட்சைக் குழுவின் மாநகர முதல்வராக தமிழரான இராமநாதன் கணேஷன் தெரிவாகியுள்ளதாக சுயேட்சைக் குழுவின் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாநகர சபையின் பிரதி முதல்வராக ஜெயசிங்க ஆராய்ச்சிகே சிறிபால வசந்த என்பவரை தெரிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவர்களின் பெயர்கள் அடங்கிய பரிந்துரை செய்யப்பட்ட பட்டியல் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-5)

## புலிகளை தடைசெய்ய வேண்டாம் எனக்கோரி சுவிஸில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யக்கூடாது என வலியுறுத்தியும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரியும் சுவிஸ் பாராளுமன்றம் முன்பாக புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

சுவிற்ஸர்லாந்தின் பேர்னில் நகரிலுள்ள சுவிஸ் பாராளுமன்றம் முன்பாக எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறவுள்ளது. இந்தப் பேரணி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"தமிழர் தாயகம், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப்பட வேண்டும். விடுதலை புலிகள் மீது தடைவிதிக்கக்கூடாது.", "அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்", "வடக்கிலும் கிழக்கிலுமிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் மீள தம் இல்லங்களில் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்"

"இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலமான ஒரு தீர்வை ஏற்கும்வரை, ஐரோப்பிய தலை நகரங்களில் அகதிகள் தரத்தில் வாழ முற்படும் தமிழர்களை வெளியேறக்கூடாது"

இதேவேளை இப்பேரணியில் கலந்து கொள்வோருக்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)



யாழ்.குடாநாட்டில் நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் எரிபொருள் விநியோக நிலையங்களில் தினமும் குவியும் மக்கள் கூட்டம். (படம்:-திலீவின்பன்)

## தேசிய உதைபந்தாட்ட போட்டிக்கு பாடசாலை வீரர்களும் சேர்க்கப்படுவர்

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்ட பிரிவு அணி வீரர்களுக்கான உதைபந்தாட்ட போட்டி தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி வண. பிதா லோங் கேட்போர்கூடத்தில், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உதைபந்தாட்ட பயிற்றுநர் எம்.பேட்டியின் நெறிப்படுத்தலில் நடந்த இக் கூட்டத்தில் 16 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் கலந்துகொண்டனர்.

ஆடிமாதம் தேசிய ரீதியில் நடைபெறவுள்ள உதைபந்தாட்ட போட்டியில் கலந்துகொள்வதற்கு ஒரு அணியை பாடசாலை வீரர்களில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான தெரிவு போட்டி ஆட்டங்கள் எதிர்வரும் 9,10,11ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப் பிள்ளை தெரிவித்துள்ளார். (கு-110)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 51



சோதனைகளைக் கடந்து சாதனையாளராக மண்டேலா

### சிறுதென்றல்

இதையடுத்து வின்னியைக் காதலித்து மணந்ததை மனக் கண் முன் நிறுத்திப் பார்த்தார். தேனிலவு இல்லை. குழந்தை பிறந்த போதாவது உடனிருந்து உதவினோமோ? இன்று அவள் தனிமையில் பாடுபட்டு குழந்தைகளையும் வளர்த்து, படிக்க வைக்கிறாள். கணவனுக்காகவும் போராடுகிறாள். அவளுக்கும் தடை! சிறைவழக்கு. அவள் குடியிருந்த வீட்டில் குண்டு வைத்து வெடிக்கச் செய்தார்கள். வீடே வெந்து சாம்பலானது. வீதியிலே நின்றவளை நண்பர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்றால், அங்கே தங்க அனுமதிச் சீட்டு இல்லை எனக் கூறி வழக்கைப் போட்டார்கள். இவை எதற்கும் பணியாமல், துவளாமல் போராடுகிறாள். ஆக "நாம் பெற்ற தாய்க்கும் உதவ முடியவில்லை. கட்டிய மனைவிக்கும் கடும்பாரமாகி விட்டோம். நாம் தேர்ந்தெடுத்த பாதை குடும்பத்தையே நரகக் குழிக்குள் தள்ளி விட்டதே" என நினைத்துக் கலங்கினார்.

ஜே.பி.மார்க்சும் , பிராம் பிசரும், மண்டேலாவுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் பாடம் கற்பித்த போது, "ஒரு போராளி குடும்பத்தை மறக்கக் கூடாது. பாசம், பரிவு காட்டவேண்டும். ஆனால், குடும்ப சிரமங்களை மட்டும் நினைத்துக் கலங்கக் கூடாது. பாசம் இருக்க வேண்டும். பாச வலைக்குள் சிக்கக் கூடாது. அடக்குமுறைச் சட்டத்தை எதிர்க்கலாம். ஆனால் தாய், மனைவி ,குழந்தை பாசம் இருக்கிறதே. அது மகா வலிமையுடையது. அது உன்னைக் கோழையாக்கி விடாத எல்லைக்குள் நிறுத்த வேண்டும்" என அவர்கள் சொன்னது மீண்டும் கூறுவது போலத் தெரிந்தது.

மறுபக்கம் பார்க்கலாமே என நினைத்தார். "என் அம்மா அரசியலில், போராட்டத்தில் பங்கேற்கவில்லை. ஆனால், தன் மகனைத் தடுக்கவில்லை. மேலும் சகல துன்பங்களையும் சுமந்தாரே! எனவே, அவர் என்னிலும் பெரிய தியாகி" என எண்ணியபோது, ஒரு தெம்பு பிறந்தது.

"அதேபோல, என் மனைவி! எத்தனை பாடுகள்? எத்தனை வழக்குகள்? சமாளிப்பதோடு தம்மைப் பார்க்கவும் வருகிறாளே! தனிமைக் கொடுமை மட்டுமா? பிறர்தரும் தொல்லை. அதையும் பொருட்படுத்தாமல், என்னை மகிழ்விப்பதற்காக சிரித்த முகத்தோடு வருகிறாளே" என நினைத்தபோது, தன்னையும் அறியாமல் கண்ணீர் வடிவதை உணர்ந்தார் மண்டேலா. "ஆகக் குடும்பமே, வேள்வியில் நாடு விடுதலை பெற்றால் தானே, இப்படி வாடும் குடும்பங்கள் அனைத்துக்கும் விடுதலை. எனவே, அதை நோக்கி" என மனத்தை உறுதி செய்து கொள்வார்.

மண்டேலா, 16வது வருடத்தைச் சிறையில் கழித்துக் கொண்டிருந்த போது தன் மகள் ஜெனி, திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கேள்விப்பட்டார். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மன்னர் ஒருவரின் மகன் இவளைக் காதலித்து மணந்துகொள்ள விரும்பினான். சமூகவழக்கப்படி, மண்டேலாவிடம் வந்து அனுமதி பெறவேண்டும். பெண்ணுக்குப் பரிசப் பணமும் தர வேண்டும். இவரோ சிறையிலிருக்கிறார். எனவே நண்பர் ஒருவரைத் தன் பிரதிநிதியாக இருந்து அந்தக் கடமையைச் செய்யச் சொன்னவர், மணமகன் குணநலன் பற்றி விசாரிக்கவும் சொன்னார். எல்லாம் நல்ல செய்தியாகவே வந்தது. திருமணமும் சிறப்பாக நடந்தேறியது.

ஆப்பிரிக்க அரசின் சட்டப்படி மண்டேலாவின் மகள் இப்பொழுது உண்மையாகவே இளவரசி ஆகிவிட்டாள். இத்தகைய சட்ட அங்கீகாரம் பெற்றவர்கள், சிறைக்குள் எப்பொழுதும் வரலாம். காவலர் நிபந்தனைகள் போடமுடியாது. இதற்காகவே, வின்னி தன்மகளை இளவரசனுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கக் கூடும் என சில பத்திரிகைகள் எழுதின.

எதிர்பார்த்தபடியே ஜெனி சிறைக்கு, அம்மாவுடன் அரசு மரியாதையுடன் அரசியாகவே வந்தாள். வெள்ளைக்காரர்கள் மரபை மீறமாட்டார்கள். சிறை அதிகாரி உட்பட எல்லோரும் அணிவகுத்து நின்று, மரியாதை செலுத்தி, அழைத்து வந்ததைப் பார்த்து மண்டேலாவும் போராளிகளும் மனம் குளிரச் சிரித்தனர். முதல் தடவையாக சிறைக்குள் சுதந்திரமான சந்திப்பு நடந்தது.

மீண்டும் குழந்தை பிறந்தவுடன், ஜெனி குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து தாத்தாவிடம் கொடுத்துப் பெயர் வைக்கச் சொன்னாள். ஸ்வாசி எனப் பெயர் சூட்டினார். இதற்கு நம்பிக்கை என்று அர்த்தம்...வரண்ட பாலையில் இடையிடையே தென்றலும் தவழ்வது போலத் தெரிந்தது. சிறைக்குள் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தே வந்தது. ரகசியப் படை வீரர்கள் பலர் கைதாகி வந்து கொண்டே இருந்தனர். சிறை அதிகாரிகளின் கொடுமையும், மனிதர்களின் குணத்துக் கேற்பத சில சமயங்களில் தளர்ந்தும், பல சமயங்களில் சித்திரவதையும் தொடரவே செய்தது.பல கைதிகள் வயதால், நோயால் மடிந்த சோகச் செய்திகளும் தொடர்ந்தன. வெளியில் சண்டை போடுகிற கட்சிகளை சிறை ஒன்றுபடுத்துகிற உலைக்களம் என்பார் மண்டேலா.

### சோதனை மேல் சோதனை

"சோதனை மேல் சோதனை-போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை என்றால்-தாங்காது பூமி"

என்ற நமது அன்பிற்குரிய கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல் வரிகளைக் கேட்கவும், புரிந்து கொள்ளவும் முடிந்திருந்தால், மண்டேலா, இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே இருந்திருப்பார்...

சிறையில் வந்து பார்த்துவிட்டுக் கண்ணீரோடு திரும்பிய மண்டேலாவைப் பெற்ற அன்புத் தாய், அதே குனு கிராமக் குடிசையில் இறந்துபோனார் என்ற செய்தி தந்தி மூலம் மகன் அனுப்பிக் கிடைத்தது. மண்டேலா, இறுதியாகச் சென்று, கடைசிக் கடமைகளைச் செய்ய அனுமதிக்குமாறு வேண்டினார். காவலோடு அனுப்புங்கள். ஓரிரு நாட்களில் திரும்பிவிடுகிறேன் என உறுதி கூறியும் மறுக்கப்பட்டது.

தட்டில் வந்த உணவைத் தள்ளிவிட்டு, முகட்டைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தத மண்டேலாவைச் சுற்றிச் செய்தியறிந்த சகாக்கள் சோகமே உருவெடுத்து உட்கார்ந்திருந்தனர். துக்கம் அதிகரிக்கும் போது வார்த்தைகள் வாயில் வருவதில்லை. மௌனம் துக்கத்தைக் கனமாக்குகிறது... ஆக, என்னைப் பெற்றவள், பிறந்த மண்ணுக்குள்... என நினைத்துக் கொண்டார். தலைவனாக இருப்பவன் தன் கவலையை பிறர்மீது ஏற்றக் கூடாது. எனவே நண்பர்களைத் தேற்றிவிட்டு தவழக்கம் போல, கல்லுடைக்கப் போனார்.... காலம் மருந்து போட்டுக் கொண்டிருந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு, இன்னொரு இடி விழுந்தது. அவரது அன்புக்குரிய முதல் மகன் தெம்பி, திருமணம் ஆகி, இரண்டுகுழந்தைகளின் தந்தையாக இருந்தவன். தனது இருபத்தியைந்தாவது வயதில், கார் விபத்தில் கொல்லப்பட்டான் என்ற தந்தி வந்தது... (தொடரும்)

# ஐரோ. ஒன்றிய தடை நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களால் தடுக்கமுடியும்

## என்கிறார் ஐரோப்பிய எம்.பி

ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளவுள்ள விடுதலைப் புலிகளிற்கு எதிரான நடவடிக்கையை தடுத்து நிறுத்துவது புலம்பெயர் தமிழர்களின் கைகளில் உள்ளது என பெயர் குறிப்பிட விரும்பாத ஐரோப்பிய நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் ஐரோப்பிய ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

ஐரோப்பியநாடாளுமன்றஉறுப்பினர்களிற்கு இலங்கையின் சரியான நிலைப்பாடு தெரியாது .இறைமையுள்ள இலங்கை என்ற நாட்டு அரசிற்கு எதிராக தீவிரவாத அமைப்பு ஒன்று போராடுகின்றது என்று பெரும்பாலான ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு தெரியும். தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றி எதுவும் தெரியாது. எனவே உண்மை நிலையை ஐரோப்பிய மக்களிற்கும் நாடாளு மன்ற உறுப்பினர்களிற்கும் எடுத்துச் சொல்வது புலம்பெயர் தமிழர்களின்பொறுப்பு.

அண்மையில் அடக்குமுறையில் இருந்து சேர்பிய போன்ற பல ஐரோப்பிய நாடுகளை விடுவிப்பதற்கு உதவியளித்த ஐரோப்பிய ஒன்றியம் தமிழர்கள் விடயத்தில் தலைகீழாக நடந்து கொள்வது தமிழர்களின்பிரச்சினையைஐரோப்பிய நாடுகள் சரியாகப் புரிந்து கொள் ளாமையே என்று தெரிவித்தார். (க)

# பயிற்சிக்காக வெளிநாடு செல்லும் வைத்தியர்கள் நாடுதிரும்ப பின்னடிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தியடைந்த நாடுகளில் விசேட பயிற்சிகளை பெறச் சென்ற வைத்தியர்கள் மீண்டும் நாடு திரும்புவதில்லை என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் மனோ தத்துவ வைத்தியம் மற்றும் ஏனைய வைத்தியத் துறைகளுக்கு நிபுணத்துவ வைத்தியர்கள் பற்றாக்குறைகயாக இருப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சுவிஸ்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர்களுக்கான செயலமர்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டிலுள்ள இலவச கல்வித் திட்டத்தின் மூலம் வைத்தியர்களை உருவாக்குவதற்காக பெருந் தொகையான நிதியை அரசு செலவிடுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாவில் சேவையாற்றும் வைத்தியர்களில் 1.2 வீதமானோர் இலங்கை வைத்தியர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# அலுவலகங்களில் அரச கரும மொழிகளை பயன்படுத்தும் செயற்திட்டம் அமுலுக்கு

(கொழும்பு)

அரசகரும மொழிகளை அலுவலகங்களில் பயன்படுத்த துரித நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசியல் யாப்பு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டியூகுணசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரஜை ஒருவர் தமிழ் , சிங்களம் , ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில்தாம் விரும்பிய மொழியில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் விதம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலதிகமாக ஊழியர்களை சேர்த்துக்கொள்வது , ஊக்குவிப்பு வழங்குவது ஆகியன குறித்தும் இந்தக் குழு கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிக்க திடீர் சோதனை குழுக்கள்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிக்கும் வகையில் திடீர் சோதனைக் குழுக்களை அமைக்க அரச நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச அலுவலகங்களில் கடமை நேரத்தில் அதிகாரிகள் அந்த இடங்களில் இருப்பதில்லை என்று கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே திடீர் சோதனைக் குழுக்களை நியமிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அதிகாரி ஒருவர் விடுமுறையில் சென்றாலோ அல்லது வேறு அலுவல்கள் நிமிர்த்தம் வெளியில் சென்றிருந்தாலோ அவரின் கடமைகளை செய்ய வேறு அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் அரச நிர்வாக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (க-9)

# இரவுநேர அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, இரவுவேளைகளிலும் , ஊரடங்கு நேரங்களிலும் நோயாளர்களின் நலன் கருதி அம்புலன்ஸ் சேவைகளை நடத்த தீர்மானித்துள்ளது.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், வை.எம்.சி.ஏ., திருச்சிலுவை வைத்தியசாலை ஆகிய நிறுவனங்கள் இந்த இரவுநேர அம்புலன்ஸ் சேவையை நடத்த இணைந்துள்ளன.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த சேவை குறித்து பூரண விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்.செஞ்சிலுவைச் சங்க கிளையினர் தெரிவித்தனர். (க-9)

# ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீக தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மலை 4.30மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் த.பிரதீஸ்வரன் (அபிவிருத்தி உதவியாளர்) தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சைவப்புலவர் நித்திய சசிதரன் "சேக்கிழாரும் சைவ வாழ்வும்" என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (கு-133)

# ஈரானை தாக்கினால் பதிலடி கொடுப்போம்

## அந்நாட்டு அதிபர் எச்சரிக்கை

அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும் தொழில்நுட்பத்தை முழு அளவில் பெற்றுள்ளோம். இனி எவரேனும் எங்களைத் தாக்கினால் தக்க பதிலடி கொடுப்போம் என்று ஈரான் அதிபர் அகமது நிஜாத் கூறினார்.

மேலும் அவர், எங்கள் நாட்டு இளம் விஞ்ஞானிகள் கடும் முயற்சி செய்து அணுகுண்டு தயாரிப்பதற்குப் பயன்படும் யுரேனியம் செறிவூட்டும் தொழில்நுட்பத்தில் வல்லமை பெற்றுள்ளனர். இதை நாங்கள் ஆக்கப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம். அணுகுண்டு தயாரிக்கும் திட்டம் எதுவும் எங்களுக்கு இல்லை.

ஆனால் எதிரிகள் யாராவது எங்களிடம் அத்துமீறினால் சரித்திரத்தில் என்றென்றும் நினைவுகூரத்தக்க வகையில் அவர்களுக்குப் பதிலடி கொடுப்போம் என்று எச்சரிக்கை விடுத்தார்.

ஈரான்- ஈராக் நாடுகளிடையே 1980 லிருந்து 88 வரை நீண்ட போர் நடந்தது. அந்த போரின் போது ஈரானிடமிருந்து ஈராக் கைப்பற்றிய கொரம்ஸார் பகுதியை 1982இல் ஈரான் மீட்டது. அந்த வெற்றி விழாவில் உரையாற்றுகையிலேயே ஈரான் அதிபர் இவ்வாறு கூறினார்.

யுரேனியம் செறிவூட்டும் பணியைக் கைவிடுமாறு ஈரானை நிர்ப்பந்திக்க ஐரோப்பிய கூட்டமைப்பின் முக்கிய மூன்று நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகியவை தீர்மானித்துள்ளன. அப்பணியைக் கைவிட மறுத்தால் ரஷ்யா மற்றும் சீனாவின் ஒத்துழைப்புடன் ஈரான் மீது பல தடைகளை விதிக்கவும் அந்நாடுகள் முயற்சி மேற்கொண்டுள்ளன. (த)

# தாய்லாந்தில் நிலச்சரிவு 100 பேர் பரிதாபமாக பலி



தாய்லாந்து நாட்டின் வடக்கு பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவினால் 100 பேர் இறந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் வடக்குப் பகுதியில் ஒரு வாரமாக கடும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பல பகுதிகளை மூழ்கடித்துள்ளது. உத்தரதித் மாகாணத்தில் வெள்ள நீரில் நான்கு ரயில்கள் சிக்கிக்கொண்டன. அதில் பயணம் செய்த ஆயிரம் பயணிகளும் அதில் இருந்து மீள முடியாமல் மாட்டிக்கொண்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவினால் இதுவரை 100பேர் இறந்துள்ளனர். இதில் 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கடும் மழை பெய்வதால் மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என உத்தரதிக் மாகாண பொது சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். (த)

# ஈராக்கில் தொடரும் தாக்குதல்; இதுவரை 39 பேர் பலியாகினர்!

ஈராக்கில் திங்கட்கிழமை இரவு முதல் நேற்று வரை நடந்த பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 39 பேர் பலியாயினர். பலர் படுகாயமடைந்னர்.

இது தொடர்பாக ஈராக் இராணுவத் தளபதி அப்துல் அஜீஸ் முகமது கூறுகையில்,

பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் கடந்த திங்கட்கிழமை இரவு வழிபாடு முடித்து திரும்பும்போது அந்த வழியில் நின்றிருந்த குண்டுகள் நிரப்பிய மோட்டார் சைக்கிள் திடீரென வெடித்ததில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

அதேபோல் காய்கறி மார்க்கெற் ஒன்றில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த கார்க் குண்டு வெடித்ததில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

மோசூல் நகரில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொல்லப்பட்டனர். இதுபோல வெவ்வெறு சம்பவங்களில் மேலும் 19 பேர் பலியாயினர்.

ஈராக்கில் புதிய அரசு அமைந்த பிறகு கடந்த மூன்று நாட்களில் தீவிரவாதிகளின் அட்டூழியம் அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நடந்த தாக்குதல் சம்பவங்களில் 98 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 280 பேர் காயமடைந்துள்ளனர். சந்தேகத்துக்கு உள்ளான 85 தீவிரவாதிகள் அமெரிக்க கூட்டுப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்றார்.

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மட்டும் இரண்டாயிரத்து 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 85 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என ஐ.நா. சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



தாய்லாந்தின் உத்தரதித் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் ரயில் பாதைகள் அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளதால் ரயில் கூரை மீது உட்கார்ந்திருக்கின்றனர் பயணிகள்.



பாகிஸ்தான் பிரதமராக இருந்த போது சுவிற்சர்லாந்து கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஊழல் நடந்துள்ளதாக பெனசிர் புட்டோ மீது வழக்கு உள்ளது. இந்த வழக்கு தொடர்பாக ஜெனீவாவுக்கு வக்கீலுடன் நேற்று முன்தினம் சென்றார் பெனசிர். தன் மீதான குற்றச்சாட்டை அவர் நீதிபதி முன் மறுத்தார்.

# மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கும் திட்டம்?

## நேபாளத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(காத்மண்டு)

நேபாளத்தை மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கும் திட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேபாளத்தில் மொத்த மக்கள் தொகையான இரண்டு கோடியே 60 இலட்சம் பேரில் 80 சதவீதம் பேர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 20 சதவீதத்தினரில் 11 சதவீதத்தினர் புத்த மதத்தினர். உலகின் ஒரே முழுமையான அங்கீகரிக்கப்பட்ட இந்து நாடு என்ற பெருமை நேபாளத்துக்கு உண்டு.

சமீபத்தில் கூடிய நேபாள பாராளுமன்றம் மன்னரின் அதிகாரத்தை பறிப்பது மற்றும் இராணுவ கட்டுப்பாட்டை மாற்றுவது, நேபாளத்தை மதச்சார்பற்ற நாடாக அறிவிப்பது என தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்து நாடு என்ற அந்தஸ்தை ஒழித்து மதச்சார்பற்ற நாடாக நேபாளத்தை மாற்றும் அரசின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

காத்மண்டு அருகே பர்கஞ்ச் பகுதியில் நேற்று முன்தினம் ஐந் தாயிரத்துக்கும் மேற்பட்டோர் டயர்களை எரித்தும் சாலைகளை மறித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடைகளை அடைக்கச் சொல்லியும் வாகனங்களை வழிமறித்தும் ஜெய் ஸ்ரீராம் எனகோஷமிட்டபடியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றனர். (த)

# செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கும் தண்டிக்கப்பட்ட குற்றவாளிக்கும் எதுவித தொடர்பும் இல்லை

## ஓசாமா பின்லேடன் தகவல்


(கெய்ரோ)

நியூயோர்க்கில் உலக வர்த்தக மைய கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் அந்த வழக்கில் குற்றவாளி என தண்டிக்கப்பட்டுள்ள சகாரி யாஸ் முசவ்லிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அல்- குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த உலக வர்த்தக மைய கட்டடம் மற்றும் வாஷிங்டனில் இராணுவத் தலைமையகம் மீது அல்- குவைதா தீவிரவாதிகள் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி விமானங்களை மோதி வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 3ஆயிரம் பேர் பலியாயினர்.

அல்-குவைதா தீவிரவாதிகளின் திட்டமிட்ட சதி இது என்பது பொலிஸாரின் தீவிர விசாரணைக்குப் பின்னர் தெரியவந்தது. இந்த தாக்குதல் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்பு சகாரி யாஸ் முசவ்லி என்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்நத தீவிரவாதியை அமெரிக்க உளவுப் படையினர் கைது செய்தனர். முசவ்லி வெள்ளை மாளிகை மீது விமானத்தை மோதச் செய்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும் அதற்கு முன்னர் அவன் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து கடந்த 4ஆம் திகதி முசவ்லிக்கு வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என அமெரிக்க கோர்ட் தீர்ப்பளித்தது.



இந்நிலையில் அல் - குவைதா தீவிரவாதிகளின் ஆதரவு பெற்ற இணைய தளத்திற்கு ஒசாமா பின்லேடன் நேற்றுமுன்தினம் அனுப்பிய ஓடியோ டேப்பில்,

அமெரிக்க அரசால் கைதுசெய்யப்பட்டிருக்கும் முசவ்லிக்கும் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி நடந்த தாக்குதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தாக்குதலுக்கு முழுக்க முழுக்க நானே பொறுப்பு.

தாக்குதல் சம்பவத்தை நிறைவேற்ற முசவ்லியை நான் நியமிக்கவில்லை. நான் நியமித்த 19 விமான கடத்தல்காரர்களும் பைலட்டுகளும் மற்றும் உதவியாளர்கள் என இரு பிரிவாக பயிற்சி எடுத்தனர். விமானத்தை எப்படி இயக்குவது என்பது குறித்து முசவ்லிக்கு ஒன்றும் தெரியாது. இது அமெரிக்க அரசுக்கே நன்கு தெரியும்.

தாக்குதல் நடத்த தீட்டப்பட்ட சதித் திட்டத்திற்கு முசவ்லி உதவியதாக விசாரணையில் ஒப்புக்கொண்டதற்கு அமெரிக்காவின் மிரட்டலே காரணம் என தெரிவித்துள்ளார். (த)

உண்மையான மகிழ்ச்சிகள் நிறைந்தது போல ஆனால், உண்மையில் சூனியமான வாழ்க்கை உலகில் ஒன்று இருக்கிறது என்றால்- அதுதான் அரசியல் வாழ்க்கையாகும்.

-இங்கர்சால்

வலம்புரி

## அனுசரணைப் பணியில் இந்தியாவின் நிலை என்ன?

இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படுகின்றதா இல்லையோ நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு முடிபுகாலம் கிட்டி விட்டது.

இதை நோர்வேயின் அனுசரணைப் பணியில் ஈடுபட்டுள்ள தூதுவர்களின் வெறுப்பான கருத்துத் தெரிவிப்புக்களில் இருந்து உணர முடிகின்றது.

இலங்கைக்கு வருகை தரவுள்ள அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் தனது வருகையால் தற்போதைய நிலைமைகளில் பெரிய மாற்றம் ஏற்படாது எனக் கூறியுள்ளார்.

சமாதான அனுசரணைப் பணியில்,மூலவேராக இருக்கவேண்டிய எரிக்சொல் ஹெய்மின் மேற்போந்த கருத்தில் இருந்து எதை உணர முடியும்?

ஆம், இலங்கை இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட முடியாததொன்று. அது விடயத்தில் முயற்சி செய்வது விழலுக்கு இறைத்த நீர்போல ஆகும் என்பதே எரிச்சோலின் முடிபு.

அவ்வகையில் இலங்கையின் சமாதானப் பணியில் இருந்து நோர்வே எந்நேரமும் விலகிக்கொள்ளலாம். இது எதிர்பார்க்கக்கூடிய ஒன்று தான்.

இங்குதான் சிக்கலே ஆரம்பிக்கின்றது. அதாவது தற்போது யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இல்லாவிட்டாலும், யுத்த நிறுத்த உடன்படிக்கை காலாவதியாகவில்லை என்ற நினைப்பு மக்கள் மனங்களில் இருக்கவே செய்கின்றது.

எனவே இந் நிலையில் நோர்வே தனது அனுசரணைப்பணியை கைவிடுமாக இருந்தால் இலங்கைத் தீவில் பெரும் யுத்தம் மூள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இங்குதான் இந்தியாவின் தார்மீகப்பொறுப்புப் பற்றி பேசவேண்டியுள்ளது. நோர்வேயின் அனுசரணைப்பணியோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா எட்டவே நிற்கிறது.

இலங்கை இன விவகாரத்தில் தனக்கு சம்பந்தம் இல்லை; அல்லது அதில் தான் தலையிட விரும்பவில்லை என்பது போன்ற நிலைப்பாட்டை இந்தியா காட்டி வருகிறது.

அதேநேரம் இலங்கையில் அமெரிக்காவின் தலைக்கறுப்புத் தெரிந்ததும் அட, இலங்கைக்கு அண்டைநாடான என்னைவிடுத்து... என்ற பாங்கில் அதன் செயற்பாடு அமைவதும் கண்டறியப்பட்ட உண்மை.

இங்குதான் இந்தியாவின் உறுதித்தன்மை தேவைப்படுகின்றது. அதாவது ஈழத்தமிழர்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையில் தமிழகத்திற்குச் செல்கிறார்கள்.

உயிரினைப்பாதுகாப்பதற்காக தமிழகத்திற்குச் செல்கின்ற வேளை அவர்கள் எதிர்நோக்கும் அபாயங்கள் ஏராளம்.

இருந்தும் இந்தியா மௌனம் சாதிப்பது ஏன்? இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணவேண்டும். ஆயுதக் கொள்வனவில் ஈடுபட வேண்டாமென இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் நிச்சயமாக பேச்சுவார்த்தைகள் மீண்டும் தளிர்விடுவது சாத்தியமாகும்.

எனினும் இதைச் செய்வதில் இந்தியா பின்னடிப்பதற்குள் இருக்கக்கூடிய காரணங்கள் புரியாதவையாக இருந்தாலும் இந்தியாவின் மௌனம் எதிர் காலத்திற்கு ஆபத்தாகவே அமையும்.

# தளபதி ரமணனின் கனவை நனவாக்க அனைவரும் உறுதி எடுக்க வேண்டும்!

## தயாமோகன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

மூத்த தளபதி ரமணன் என்ன இலட்சியத்திற்காக தன்னுயிரை தியாகம் செய்தாரோ அவரது கனவை நாம் நனவாக்க வேண்டும் என்பதை இந்நாளில் எல்லோரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் மூத்த தளபதி ரமணனின் வீரவணக்க நிகழ்வில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய தயாமோகன் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக கடந்த 21 ஆண்டுகளாக மண்ணின் விடுதலைக்காக பல வகையில் திருப்புமுனையான தாக்குதல்களை மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கு உரம் சேர்த்து பல்வேறுபட்ட பணிகளை மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிக்கொண்டு சமாதானச் சூழல் காலத்தில் மக்களின் பாதுகாப்புக்காக தன்னை அர்ப்பணித்து உழைத்துக்கொண்டிருந்த போது நயவஞ்சர்களின் கொலை வெறியாட்டத்தில் சிக்கி மாவீர ராகி மாவீரர்களின் முதல் நிலை வீரனான கேணல் ரமணன் இருக்கின்றார்.

மண்ணில் விடுதலைக்காக இது வரையில் நான்கு



கேணல் நிலையிலுள்ள போராளிகளை விதைத் திருக்கின்றோம். இதில் முதன் முதலாக கேணல் கிட்டு என்பவரே இந்திய வல்லாதிக்க நயவஞ்சகர் களால் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர். இறுதியாக கேணல் ரமணனை இழந்து நிற்கின்றோம்.

சிங்கள தேசம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்படியான முதன்மை நிலையிலுள்ள போராளிகளை நயவஞ்சகத்தனமாக மறைமுகமாக இருந்து படுகொலை செய்வதன் மூலம் விடுதலைப் போராட்டத்தினை நசித்து விடலாம் என்பதை நினைத்துக் கூடபார்க்க முடியாது.

படையினரும் அவர்களுடன் துணைபோகும் சக்தி களும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடியாக மோத முடியாத நிலையில் மறைந்து இருந்து கோழைத்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே இந்த மாவீரர் என்ன இலட்சியத்திற்காக தன்னுயிரை தியாகம் செய்தாரோ அவரது கனவை நாம் நனவாக்க வேண்டும் என்பதை இந்நாளில் எல்லோரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கூறினார். (கு)

# மூன்றாம் தரப்பு அனுசரணையை கைவிடும் மஹிந்தவின் யோசனை புலிகளால் நிராகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களின் போது சர்வதேச அனுசரணையைக் கைவிடுவதற்கு தென்னிலங்கை மதகுருமார் ஊடாக மஹிந்த ராஜபக்ஷ அனுப்பிய யோசனை விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக்களை சர்வதேச தலையீடின்றி நடத்தும் மஹிந்த ர்ராஜபக்ஷவினது நேர்வழி அணுகுமுறை குறித்த யோசனையை கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலி களைச் சந்தித்த தென்னிலங்கை மதகுருமார் கொண்டு வந்திருந்தனர். இவர்கள் கிளிநொச்சிக்கு வருவதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

இந்த யோசனையை தமிழ் மக்கள் மீது இன்னொரு யுத்தத்தையும் இனப்படுகொலையையும் நிகழ்த்துவதற்கான சதியென வர்ணித்ததமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அதை முற்றாக நிராகரித்துள் ளார்.

கடந்த காலங்களில் அரசுடன் நடத்திய நேரடிப் பேச்சுக்களின் முடிபுகளை அது நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடித்துப் பேச்சுக்களைக் குழப்பியடித்துவிட்டு பழி யைப் புலிகள் மீது சுமத்திவந்த அரசின் அணுகுமுறை காரணமாகவே புலிகள் மூன்றாந்தரப்பு அனுசரணையை வலியுறுத்துகின்றனர் என்பதும் கடந்த வாரம் கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய செவ்வியில் தன்னைப் பொறுத்தவரை இலங்கை இனப் பிரச்சினையில் சர்வதேசதலையீடுதேவையற்றது என்பது தனது தனிப்பட்ட கருத்து எனக் கூறியிருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கன. (கு)

# இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காணவேண்டும்

## தமிழக அரசு வலியுறுத்து

(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண வேண்டும் என்று தமிழக அரசாங்கம் உத்தியோக பூர்வமாக வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான முதலாவது சட்டப்பேரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இந்திய மத்திய அரசு பிரதிநிதியான ஆளுந ரான சுர்ஜித் சிங் பர்னாலா உரையுடன் தொடங்கியது.

அந்த உரையில் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் பல்வேறு கொள்கை விளக்கக் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன.

அதில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து கூறப்பட்டுள்ளதாவது;

உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதும், தொடர்ந்து கவலை அளித்துக்கொண்டிருப்பதுமான இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அமைதி பேச்சுவார்த்தையின் மூலம் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்களின் இந்த அரசு விரும்புகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையிலேயே ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளமையானது தமிழீழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்த தமிழ் நாட்டு அரசினது கரிசனைய்ய தொடக்கத்திலேயே வெளிப்படுத்துவதாக உள்ளதாக தமிழ்நாட்டு அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (கு)

# வர்த்தக நிலையங்கள் முன் வாகனங்களை நிறுத்தத் தடை

யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன் பாக வாகனங்களை நிறுத்த வேண்டாம் என படையினர் பொது மக்களுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் அறிவுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி; ஆஸ்பத்திரி வீதி உள்ளிட்ட பிரதான வீதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதற்கே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நல்லூர் பின் வீதியில் படையினரை இல்க்கு வைத்து சைக்கிள் ஒன்றில் கிளைமோர் குண்டு வெடிக்க வைக்கப்பட்ட சம்பவத்தையடுத்தே படையினர் இத்தகைய நடைமுறையை யாழ்.நகரில் நடைமுறைப் படுத்திய தாக கூறப்படுகின்றது. (கு-15)

# 14 தமிழ் இளைஞர்களும் பிணையில் விடுதலை

தமிழீழ விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 14 தமிழ் இளைஞர்களும் நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கடந்த மாதம் கதிர்காமத்திலிருந்து கொழும்பிற்கு வந்தபோது சோதனைச்சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்கள். (கு-9)

# கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கடந்த மாதம் நடாத்தப்படவிருந்த கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கு-133)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



பெரிய இன்ப வாழ்வே பேரின்பப் பெருவாழ்வு. உலகம் தரும் ஆனந்தம் அத்தனையும் குறையுடைய ஆனந்தமே. குறைவில்லா ஆனந்தம் முக்தி மட்டுமே. முக்தியின்பம் என்பது எல்லையற்றது; நிரந்தரமானது; அழிவில்லாதது.

சுவாமி விவேகானந்தர்

## தவறுதலான வெடிவிபத்தில் போராளி சாவு



(கிளிநொச்சி)

யாழ்.குடாரப்பு பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளி ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்துள்ளார்.

லெப்.கேணல் வீரமணி என்றழைக்கப்படும் முதலாம் யூனிற் பாவற்குளம் ,வவுனியாவை சொந்த இடமாகவும் 156ம் கட்டை, தொண்டமான்.நகர் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சுப்பிரமணியம் வடிவேலு என்ற போராளியே சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ச-05)

## இளைஞனைக் காணவில்லையென ம.உ. ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தனியார் பஸ் நடத்துனரான இளைஞன் ஒருவரை கடந்த 23 ஆம் திகதியிலிருந்து காணவில்லை என யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் தனதுகடமையை முடித்துக்கொண்டு வீடுதிரும்பும் போது காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் சயம்பு வீதி வலந்தலையைச் சேர்ந்த செல்வராசா சேந்தன் (வயது20) என்பவரையே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

இவர் காணாமல் போனமை தொடர்பாக காரைநகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் கடற்படையினர் இளைஞன் காணாமல் போனது தொடர்பாக எதுவும் தெரியாது என கூறியுள்ளனர். (ச-133)

# சுயாதீனமாக போரை ஆரம்பித்து உரிமையை வென்றெடுக்கும் காலம் நெருங்கி விட்டது!

## கேணல் பானு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நாங்கள் மிக விரைவில் சுயாதீனமாக போரைத் தொடங்கி எங்கள் சுயநிர்ணய உரிமைகளை பெறவேண்டிய காலம் நெருங்கி விட்டது.

இதற்கு மக்களும் படைப்பலத்தை வலுப்படுத்திக் கொண்டு தயாராகி விட்டார்கள் என மட்டு.மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

தாண்டியடி அ.த.க.பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மூத்த தளபதி கேணல் ரமணனின் வீரவணக்கக்கூட்டத்தில் கலந்து வணக்க உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

கடந்த 21 ஆண்டுகளுக்கு முன்பு மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ,படுகொலைகளை நிறுத்துவதற்காக சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டு படைகளுக்கு எதிராக திருப்புமுனையான தாக்குதல்களில் ஈடுபட்டு அதில் பெரும் வெற்றிகளை ஈட்டிக்கொண்டவர்தான் கேணல் ரமணன்.

இவர் அரசியல்,இராணுவம், புலனாய்வு என்ற ரீதியில் தனது போராட்டத்தை பல தடைகளின் மத்தியில் முன்னெடுத்துக் கொண்டு மக்களின் எதிர்கால விடிவிற்காக பலதரப்பட்ட தாக்குதல்கள் மூலம் தன்னை அடையாளப்படுத்தி பல போராளிகளையும் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டு ஒழுங்கான தலைமைத்துவத்தின் கீழ் முன்னின்று படைப்பலத்தை வளர்த்துக் கொண்டு வந்தார்.

ஆரம்ப காலத்தில் எமது விடுதலைப் போராட்டத்தினை நசுக்குவதற்கு, எம்மைப் பலவீனப்படுத்துவற்கு பல சக்திகள் சிங்கள தேசத்தினால் உருவாக்கப்பட்டு பல ஊடுருவல் தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த அவ்வேளையில் கூட ரமணன் அஞ்சாது தனது சிறந்த புலனாய்வுத்துறையின் படைக்கட்டுமானத்துடன் ஊடுருவல்களைத் தடுத்து தாக்குதல்கள் நடத்தி அதில் வெற்றியும் கண்டவர்.

இப்படிப்பட்ட ஒரு பெரும் தளபதியை இந்த சமாதான சூழலில் நாம் இழந்து விட்டோம். இவ்விழப்பு எல்லோருக்கும் பேரிழப்பாகவே உள்ளது.இந் நிலையிலும் நாம் இந்த மாவீரனின் கனவை நினைவாக்க இவ்விடத்திலேயே உறுதி எடுத்துக்கொள்ள வே[illegible]டும் என்று கூறினார். (ரு)

## வடக்கு கிழக்கில் அபிவிருத்தி பணிகளை தொடர வேண்டும்

### அரசு யப்பானியத் தூதுவரிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்தும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று யப்பானியத் தூதுவரிடம் அரச சமாதான செயலக பணிப்பாளர் பாலித கோகன்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்பதற்காகச் செல்லும் முன்னர் நேற்று முன்தினம் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோன்ன யப்பானியத் தூதுவரை சந்தித்துப் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் இடம் பெறவில்லை என்பதை சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டியுள்ளமையை நினைவுபடுத்தினார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான உத்தேச தடையானது தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துவர உதவும் என்று பாலித கோகன்ன மேலும் தெரிவித்துள்ளார். (ச-9)

---

### புறாப்பொறுக்கி...

அப்பகுதி சுற்றிவளைக் கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை இத்தேடுதல் நடவடிக்கையின் காரணமாக யாழ். பருத்தித்துறை வீதியூடான போக்கு வரத்துக்கள் சுமார் ஒரு மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மூவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5,15,101)

---

### குளப்பிட்டி...

பணியாற்றும் சிவானந்தம் சிவகுமாரன் (வயது 40) என்ற பொதுமக னும் உயிரிழந்தார்.

கடையினுள் நின்ற உரிமையாளரும் சிறுமி ஒருவரும் இத்தாக்குதலில் இருந்து தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

இதேவேளை தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு முன்னால் உள்ள சி.சி.த.க.பாடசாலையின் மதில்களும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு 9மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளைமேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். சிப்பாயின் சடலம் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

---

### ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தால்...

உலகம் தன் பக்கம் இருப்பதாக புலிகள் நினைத்தனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைவரும்போது அவர்கள் உணர்வார்கள். அவர்கள் மேலும் அவதானமாக நடக்கவேண்டியிருக்கும்.ஒரு விடயத்தை இரண்டு தடவை யோசிக்கவேண்டியிருக்கும். உள்நாட்டுடன் மட்டுமல்லாது வெளிநாட்டுடனும் அவர் கள் மோத வேண்டியிருக்கும்.முழு உலகையும் ஒரே தடவையில் எதிர்த்து நிற்க அவர்களால் முடியாது. அரசியல் ஞானம் உள்ளவர் எவரும் அவ்வாறு நினைக்க மாட்டார் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையைத் தொடர்ந்து புலிகள் பேச்சுக்கு வருவர் என்று ராஜபக்ஷ நம்புவதாக பினான்சியல் ரைம்ஸ் மேலும் கூறியுள்ளது.

ஏற்கனவே அமெரிக்கா,இந்தியா,பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகள் மீதான தடையை விதித்துள்ள இந் நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஐரோப்பிய ஒன்றியமும் அத்தடையைக் கொண்டு வரவுள்ளது என பினான்சியல் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தால் பேச்சுமேசையில் இருந்து அவர்கள் ஒதுங்கிவிடுவார்கள் என ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் தெரிவித் ததையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5,6)

## அலுவலகத்தை சேதப்படுத்தியதன் மூலம் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது

### கஜேந்திரன் எம்.பி.தெரிவிப்பு

இராணுவத்தினர் மற்றும் ஈ.பி.டி.பி.உறுப்பினர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது செயலகத்திற்கும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்திற்கும் தீ வைக்கப்பட்டதன் மூலம் தனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அவர் கடந்த 12 ஆம் திகதி இராணுவம் தனது அலுவலகத்திற்குள் பிரவேசித்து தீ வைத்ததில் சுமார் 6 இலட்சம் ரூபா ந[illegible]ம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கட்டடத்திற்கு தீ வைக்கப்பட்டதன் மூலம் அங்குள்ள ஆவணங்கள் நாசமடைந்துள்ளமையால் சுமார் 85 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் தமது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் தமது ஊழியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டுமென்று அவர் சபாநாயகரை கேட்டுள்ளார்.

இதேபோன்ற சம்பவத்தை தாம் எதிர்நோக்கியது இது முதற் தடவை அல்ல என்றும் இதற்கு முன்னர் நாலு தடவைகள் தமது செயலகத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக ஆராய்ந்து சிறப்புரிமை மீறப்பட்டிருந்தால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் உறுதியளித்துள்ளார். (ச-[illegible])

---

### கடற் கண்காணிப்பு...

கடற்கண்காணிப்பை மீண்டும் தொடங்குவது தொடர்பாக சில விடயங்களை கண்காணிப்புக்குழு கோரியிருந்ததாயினும் அரசு மற்றும் விடுதலைப்புலிகளிடம் இருந்து அவற்றுக்கான பதில் கிடைக்கவில் லையென்று கண்காணிப்புக்குழு வட்டாரங் கள் தெரிவித்தன.

ஆயினும் புலிகள் தமக்கொரு கடிதம் அனுப்பி வைத்திருப்பதாகவும் அரசாங்கத்தின் பதில் வந்துகொண்டிருப்பதாகவும் ஹெலன் தெரிவித்தார்.

புலிகளின் கடிதம் வேண்டிய தகவல்களைத் தாங்கி வரவில்லை. அது பொதுவான ஒன்றுதான் என்று தெரிவித்த ஹெலன் கடித விபரங்களை வெளியிடாமல் 'அது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குள் மட்டும் உரிய விடயம்' எனவும் தெரிவித்தார். (ச-5,6)

---

### அரசியலாளர்...

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகளுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் சந்தித்துப் பேசுவதற்கு அனுமதி பெற்றுத் தருமாறும் பெளயர் ஊடாக நோர்வேயிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

தொடர்ந்து ஜோன் ஹான்சன் பௌயர் அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்கவை சந்தித்து மனித உரிமைகள் துறை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித கோகன்னவை நோர்வேயின் விசேட தூதுவர் நேற்று முன்தினம் இரவு சந்தித்து சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை குறித்து பேசியுள்ளார்.

நேற்றிரவும் நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் தன்னை சந்தித்துக் கலந்துரையாடியதாக பாலித கோகன்ன தெரிவித்தார். (ச-5)

நிறைஞ்சனாஸ்

விஜய், சங்கவி நடித்த

கொயம்புத்தூர் மாப்பிள்ளை

கா.நே: 10.30,2.15,5.30,8.45

நாதவிஸ் சினிமா யாழ்ப்பாணம்

04.05.2006 முதல்

10.30,2.30,6.30,9.30

மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திர[illegible]

பீட்டர் ஜக்ஷன்

கிங்கொங்

(KING KONG)

தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 26.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.